**O.S.No. 75 /2015**

**நாள்:18.07.2022**

***வா.சா.1 சத்தியநாராயணன்***
***<u>2, 3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>***

*தாவா சொத்து சந்தை புறம்போக்கு என்றால் சரிதான். அதன் விஸ்தீரணம் எனக்கு தெரியாது. அதன் சர்வே எண் தெரியாது. சந்தை புறம்போக்கு விஸ்தீணரம் சுமார் 1 1/4 ஏக்கர் என்றால் தெரியாது. சந்தை புறம்போக்கு இடம் எனக்கு தெரியுமா என்றால் வழி மட்டும் தான் தெரியும். கடத்தூர் புதிய பேரூந்து நிலையம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். கடத்தூர் பஸ் பேருந்து நிலைத்துக்கு பின்பு உள்ள சமுதாய கூடம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். புதிய பேரூந்து நிலையத்திற்கு வடக்கில் காவல்நிலையம் உள்ளது என்றால் சரிதான். பின்புறம் சீனிவாச பெருமாள் கோவில் உள்ளது எனக்கு தெரியும் என்றால் சரிதான். கடத்தூர் காவல்நிலையத்துக்கு வடக்குபுறம் மேல்நிலைபள்ளி செல்லும் தார்சாலை உள்ளதா என்றால் உள்ளது. கடததூர் புதிய பேருநது நிலையம் தெற்குபுறம் புதுரெட்டியூர் சாலை உள்ளது என்றால் சரிதான். புதுரெட்டியூர் செல்லும் தார்சாலை மற்றும் மேல்நிலைபள்ளிக்கு செல்லும் தார்சாலைக்கு இடையே உள்ள புதிய பேருந்து நிலையம் காவல் நிலையம் சமுதாய கூடம் மற்றும் சீனிவாச பெருமாள் கோயில் ஆகியவைகள் வழக்கு சொததான சந்தை புறம்போக்கு என்றால் எனக்கு தெரியாது. சந்தை புறம்போக்குக்கு உரிமை பரிகாரம் கோரி தாக்கல் செயது விட்டு சொத்தை பற்றி தெரியாமல் வழக்கு தாக்கல் செய்து சாட்சியமளிக்கிறேன் என்றால் வழிபாதை மட்டும் தான் தெரியும். நான் தாக்கல் செய்துள்ள வழக்கு பரிகாரத்தில் சந்தை புறம்போக்கு வழி பாதைக்கு மட்டும் என பரிகாரம் கேட்டுள்ளேனா என்றால் ஆமாம். நான் சொல்வது போல் இந்த வழக்கு சொத்தான சந்தை புறம்போக்காக எவ்வித வழிபாதை பரிகாரமும் கோரவில்லை என்றால் சரியல்ல. வழீபாதை எத்தனை அடி அகலம் எத்தனை அடி நீளம் என்றால் சுமார் 10 அடி அகலம் 10 அடி நீளமுள்ள வழிபாதைக்கு வழக்கு தாக்கல் செய்துள்ளேன். நான் கடத்தூர் உள்ள விஜய ஐயர் தெருவில் உள்ள மாடி வீட்டில் குடியிருக்கிறேன் என்றால் சரிதான். சந்தைபுறம்போக்கு வடக்கே உள்ள மேல்நிலை பள்ளியில் ரோட்டிற்கு வடபுறம் 1 முதல் 3 பிரதிவாதிகள் டீ கடை உள்ளது என்றால் சரிதான். அந்த பிரதிவாதிகள் கடை கிழக்கு பார்த்த வாசல் என்றால் சரிதான். பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட டீ கடைக்கு அடுத்து எனக்கு பாத்தியப்பட்ட கிழக்கு பாாத்த ஒரு மாடி கட்டிடம் உள்ளது என்றால் சரிதான். அந்த ஒரு மாடி கட்டிடம் ஆதிகாலத்தில் இருந்து என் தந்தை அனுபவித்து அவரது இறப்பிற்கு பின்பு நான் அனுபவித்து வருகிறேன் என்றால் சரிதான். என்னுடைய மாடி கட்டிடத்தற்கு தருமபுரி டூ கடத்தூர் செல்லும் சாலை வழியாக எனது வீட்டிற்கு செல்லலாம் என்றால் செல்லலாம் ஆனால் மாடிக்கு செல்லமுடியாது.*

என்னுடைய கீழ்மாடியிலிருந்து மேல்மாடிக்கு செல்ல வழி வைக்கவில்லையா என்றால் வைக்கவில்லை. எனக்கு சொந்தமான வீட்டில் ஆதியில் இருந்து ஜவுளி கடை நடத்தி வந்தேன் என்றால் சரிதான். அதன்பின்னிட்டு அந்த வீடு கடையை குணா என்பவருக்கு பேக்கரிக்கு வாடகைக்கு விட்டுள்ளேன் என்றால் சரிதான். குணாவிற்கு பின்னிட்டு மணி என்பவருக்கு மளிகை கடைக்காக வாடகைக்காக விட்டுள்ளேன் என்றால் சரிதான். மளிகை கடை வைத்திருக்கும் மணி சுமார் 12 வருடமாக கடை நடத்தி வருகிறார் என்றால் 20 வருடமாக நடத்தி வருகிறார். என்னுடைய வீடு கடை சர்வே எண் தெரியுமா என்றால் சரியாக நினைவில்லை. பிரதிவாதிகளின் டீ கடைகள் சொத்து விவரம் தெரியுமா என்றால் தெரியாது. 1ம் பிரதிவாதியின் தந்தை பெயர் அண்ணாமலை தாயார் பெயர் சுந்தரியம்மாள். டீ கடைக்கும் என் கடைக்கு இடையே ஒரே ஒரு குறுக்கு சுவர் உள்ளது என்றால் இல்லை. என்னுடைய கடைகளை 1973 ஆம் ஆண்டு கட்டப்பட்டது. பிரதிவாதிகளின் டீ கடை எப்போது கட்டியது என்றால் விவரம் தெரியாததால் எனக்கு தெரியாது. எனக்கு விவரம் தெரிந்த காலத்திலிருந்து சுந்தரியம்மாள் பெட்டி கடை இருந்த விவரம் தெரியும். சுந்தரியம்மாள் இறப்பிற்கு பின்னிட்டு 1ம் பிரதிவாதி நடத்தி வந்தார் என்றால் இல்லை. ஒரு பாய்க்கு வாடகைக்கு விட்டு நடத்தி வந்தார். அவர் காலிசெய்த பிற்கு 1 முதல் 3 பிரதிவாதிகள் டீ கடை நடத்தி வருகிறார்கள் என்றால் சரிதான். டீ கடைக்கும் என்னுடைய கடைக்கு ஒரே சுவர் என்றால் சரிதான் அது என்னுடைய சுவர். என் அப்பா பெயர் ராமநாதன். என்னுடைய தந்தை 07.12.1970ல் பிரதிவாதிகளுக்கும் எனக்கும் உள்ள சுவர் பொது சுவர் என்று பத்திரம் எழுதி கொடுத்துள்ளார் என்றால் பணம் கொடுத்தால் தான் பாத்தியம் என்று எழுதிகொடுத்துள்ளார். மணிகண்டன் த-பெ.சரவணன் என்பவரை தெரியுமா என்றால் சரவணனை தெரியும் அவரது மகனை தெரியாது. தாவா சொத்தில் சந்தை கூடுகிறதா என்றால் தற்சமயம் இல்லை. பிரதிவாதிகளின் டீ கடை சுந்தரியம்மாள் பெயரில் நத்தம் பட்டா உள்ளது என்றால் கொடுத்துள்ளார்கள். பிரதிவாதிகளின் டீ கடை சந்தை புறம்போக்கில் உள்ளதா சுந்தரியம்மாள் பட்டாவில் உள்ளதா என்று தெரியுமா என்றால் சந்தைபுறம்போக்கு என்று தெரியும். நான் சொல்வது தவறு சந்தை புறம்போக்கு அல்ல சுந்தரியம்மாளின் நத்தம் பட்டா பகுதி என்றால் இல்லை. வட்டாட்சியர் பாப்பிரெட்டிபட்டி அவாகளால் வழங்கப்பட்ட நத்தம் வீட்டுமனை பட்டா என்று கொடுத்துள்ளார் என்றால் இல்லை. சுந்தரியம்மாள் பெயரில் வழங்கப்பட்ட பட்டா சுந்தரியம்மாள் பெயரிலும் அவரது மகன் 1ம் பிரதிவாதி பெயரிலும் தாக்கல் ஆகி உள்ளது என்றால் என்ன நடந்தது என்று தெரியாது. சுந்தரியம்மாள் பிரதிவாதிகளின் வழக்கு சொத்தை 26.03.2004 அன்று 1ம் பிரதிவாதிக்கு தானசெட்டில்மெண்ட் எழுதிகொடுத்துள்ளார் என்றால் தெரியாது. என்னுடைய இரண்டு கடைகள் வீடு எப்படி பாத்தியம என்றால் என் அப்பா உயில் மூலம் எனக்கு பாத்தியம் கொடுத்துள்ளார். அப்பாவிற்கு எப்படி பாத்தியம் என்றால் அவர் கிரயம் பெற்ற சொத்தாகும்.

கு.வி. வேண்டுகோளின் படி ஒத்தி வைக்கப்படுகிறது.